**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை: செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B.,(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ம் நாள் செவ்வாய்கிழமை**

**<u>அசல் வழக்கு எண்.114/2024</u>**

P.பழனிமுத்து ....**வாதி**

**//எதிர்//**

1) மருதாயி

2) முத்துகிருஷ்ணன்

3) பாக்கியலெட்சுமி .......**பிரதிவாதிகள்**

இவ்வழக்கு எனது முன்னிலையில் கடந்த 23.06.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சக்திவேல் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.R.பாலசுப்ரமணியன் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்:

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது தாவா சொத்தை நளஇளப்பம் சரிகட்டி மூன்று சம பாகங்களாகப் பிரித்து அதில் வாதி மற்றும் 1, 2ம் பிரதிவாதிகளாகிய மூவருக்கும் தலா ஒரு பங்கு பாகம் பாகப்பிரிவினை செய்து தருமாறு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** தாவா சொத்து வாதி மற்றும் 2ம் பிரதிவாதியின் தந்தையும் மற்றும் 1ம் பிரதிவாதியின் கணவருமாகிய பெருமாள் என்பவருக்கு பாத்தியப்பட்ட அவரது தனிப்பட்ட சொத்து என்று இரு தரப்பினர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மேற்படி பெருமாள் என்பவர், கடந்த 23.06.2006 அன்று வாதி மற்றும் 1, 2ம் பிரதிவாதிகளை மட்டுமே வாரிசுகளாக விட்டு எவ்வித விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்ற சங்கதியானது இரு தரப்பினர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

**வழக்குரையின் சுருக்கம்:**

**3)** தாவா சொத்து பெருமாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது. மேற்படி பெருமாளின் மகன்கள் 1ம் வாதி மற்றும் 2ம் பிரதிவாதியாவார். 1ம் பிரதிவாதி மேற்படி பெருமாளின் மனைவியாவார். 3ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியின் மனைவியாவார். தாவா சொத்து ஒரு நத்தம் நிலம் ஆகும். தாவா சொத்திற்குரிய பட்டாவானது மேற்சொன்ன பெருமாள் என்பவர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது. தாவா சொத்தில் ஒரேயொரு ஓட்டு வில்லை வீடு உள்ளது. தாவா சொத்தின் ஓட்டுவீட்டில் மேற்சொன்ன பெருமாள் என்பவர் இறக்கும் வரை தனது குடும்பத்தினருடன் வசித்து வந்துள்ளார். தாவா சொத்து செம்பியநத்தம் கிராமத்தில் அமைந்துள்ள புல எண்.207/21ல் ஹெக்.0.01.19 ஏர்ஸ் நிலம் ஆகும்.

**4)** மேற்சொன்ன பெருமாள் என்பவர், கடந்த 23.06.2006 அன்று வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார். எனவே, வாதி மேற்சொன்ன பெருமாளின் வாரிசு ஆவார். பெருமாளுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தைப் பொறுத்து நாளது தேதி வரை எவ்விதமான

பாக பிரிவினையும் பெருமாளின் வாரிசுகளுக்கு இடையே ஏற்படவில்லை. எனவே, தாவா சொத்தானது பிரிக்கப்படாத கூட்டு குடும்ப சொத்தாகும்.

**5)** தாவா சொத்தில் ஒரேயொரு ஓட்டு வில்லை வீடு உள்ளது. கடந்த 05.04.2024 அன்று வாதி 1, 2 பிரதிவாதிகளை அணுகி தாவா சொத்தை முறையாக பாகப்பிரிவினை செய்து தனது பாகத்தை ஒதுக்கி தருமாறு கேட்டுள்ளார். ஆனால், 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதிக்கு கடந்த 09.06.2023 அன்று தாவா சொத்தைப் பொறுத்து ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தை ஏற்படுத்தி கொடுத்துள்ளார்கள். தாவா சொத்தைப் பொறுத்த வில்லங்கத்தை பார்த்தபோதுதான் மேற்படி கிரைய ஆவணமானது ஏற்பட்டுள்ளது என்ற விவரம் வாதிக்கு தெரிய வந்தது. மேற்சொன்ன கிரையமானது சட்டப்படி செல்லத்தக்கத்தல்ல. மேற்படி கிரைய பத்திரமானது வாதியின் உரிமையை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது. தாவா சொத்தில் ஒரேயொரு ஓட்டு வில்லை வீடு மட்டுமே உள்ளது. அவ்வீடானது வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளின் கூட்டு அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் நாளது தேதி வரை இருந்து வருகிறது.

**6)** 1 முதல் 3 வரையான பிரதிவாதிகளுக்கு இடையே ஏற்படுத்தப்பட்ட மேற்சொன்ன கிரையமானது சட்டப்படி செல்லத்தக்கத்தல்ல. மேற்சொன்ன கிரைய ஆவணத்தின் மூலம் தாவா சொத்தைப் பொறுத்த உரிமைமூலமானது யாருக்கும் பாத்தியப்படவில்லை. மேற்சொன்ன கிரைய ஆவணம் தாவா சொத்தில் உள்ள வாதியின் பங்கை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது. கடந்த 05.04.2024 அன்று தாவா சொத்தை முறையாக பாகப்பிரிவினை செய்யக் கோரி வாதி, 1, 2ம் பிரதிவாதிகளை அணுகிய சமயத்தில், 1 மற்றும் 2 பிரதிவாதிகள் பாகப்பிரிவினை செய்து தர மறுத்துவிட்டனர். தாவா சொத்தில் வாதியும் கூட்டு பங்குதாரர் என்ற

உரிமையில் இவ்வழக்கை பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளார். எனவே, இவ்வழக்கானது பாகப் பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>**

**7)** வாதியால் வழக்கில் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ள விவரங்களை வாதியே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல. இந்த பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் தெளிவாக ஒப்புக்கொண்ட சங்கதிகளைத் தவிர மற்றவைகளை இந்த பிரதிவாதிகள் மறுக்கிறார்கள். அவற்றை வாதியே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். தாவா சொத்து பெருமாள் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை வாதியே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு இடையே குறிப்பிடப்பட்டுள்ள உறவுமுறை உண்மை. முத்துவன்னான் மகன் பெருமாள் என்றும், பெருமாள் கடந்த 23.06.2006 அன்று இறந்துவிட்டார் என்றும் குறிப்பிட்டுள்ளது உண்மை. தாவா சொத்தில் பெருமாள் ஒரு ஓட்டுவில்லை வீடு கட்டியுள்ளார் என்றும், மேற்படி சொத்து பெருமாள் இறப்பிற்கு பிறகு இன்று வரை கூட்டு சுவாதீனத்தில் இருந்து வருவதாக வாதியால் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் பொய்.

**8)** தாவா சொத்து பிரிவினையில்லாத கூட்டு குடும்ப சொத்து என்றும், வாதி ஒரு கூட்டு பங்குதாரர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் பொய். தாவா சொத்தில் ஒரேயொரு ஓட்டுவில்லை வீடுதான் உள்ளது என்று குறிப்பிட்டுள்ள விவரத்தை வாதியே நிரூபிக்க வேண்டும். கடந்த 05.04.2024 ம் தேதி, வாதி பிரதிவாதிகளிடம் தாவா சொத்தை அளந்து

அத்து காட்டி பிரிவினை செய்துகொள்ளலாம் என்று கேட்டுள்ளதாக சொல்வது பொய்.

**9)** 1, 2 பிரதிவாதிகள் சேர்ந்து 3ம் பிரதிவாதிக்கு கடந்த 09.06.2023 அன்று ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் எழுதி கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளது உண்மை. மேற்படி ஆவணத்தை பிரதிவாதிகள் ஒன்று சேர்ந்து கொண்டு மோசடியாக தயாரித்துள்ளதாகவும், மேற்படி ஆவணம் சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் அல்ல என்றும், மேற்படி ஆவணம் தாவா சொத்தில் வாதிக்கு உள்ள உரிமையை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும் வாதியால் குறிப்பிட்டுள்ளது பொய்.

**10)** கடந்த 09.06.2023ம் தேதிய கிரைய பத்திரத்தின் அடிப்படையில் 3ம் பிரதிவாதிக்கு சொத்தில் தனிப்பட்ட உரிமை எதுவும் ஏற்படாது என்றும், பிரதிவாதிகளின் நடவடிக்கையால் வாதிக்கு பாகப்பிரிவினை கோரி இவ்வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ள விவரங்கள் பொய். தாவா சொத்தில் வாதிக்கு 1/3 பங்கு சட்டப்படி உரிமையுண்டு என்று குறிப்பிட்டுள்ளது பொய். தாவா சொத்து இன்று வரை அளந்து அத்துகட்டி பாகப்பிரிவினை செய்துகொள்ளாமல் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாக சொல்வது பொய். வாதிக்கு வழக்கில் கூறியுள்ளபடி பரிகாரம் கிடைக்க சட்டப்படி உரிமையுண்டு என்று குறிப்பிட்டுள்ளது பொய். தாவா சொத்து விவரம் சரியல்ல. வாதியால் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் Self–serving ஆவணம் ஆகும். வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல.

**11)** பெருமாள் இறந்த உடன்காலில் தாவா சொத்தை அளந்து, அதன் அடிப்படையில் மொத்த சொத்தில் கீழ்புற ஓரத்தில் 1/3 பாகம் வாதிக்கு

ஒதுக்கி கொடுக்கப்பட்டுள்ளது. மொத்த சொத்தில் மேல்புற 2/3 பங்கு 1, 2 பிரதிவாதிகளுக்கு பிரிக்கப்பட்டு அவர்கள் தனிப்பட அனுபவித்து வந்து, 3ம் பிரதிவாதிக்கு உரிய கிரையத் தொகைக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள். மேற்படி கிரையப் பத்திரத்தின் சொத்து விவரத்திலேயே முழுமையான விவரங்கள் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளது.

**12)** தாவா சொத்தில் ஒரேயொரு ஓட்டுவில்லை வீடு கீழ்புறத்திலிருந்து சிறிது தள்ளி மேல்புறத்தில் உள்ளது. எனவே, பெருமாள் இறந்த உடன்காலில் பாகப்பிரிவினை செய்த சமயத்தில், வீட்டின் கீழ்புற பாதி வாதிக்கு ஒதுக்கப்பட்டு, அவர் அனுபவத்தில் இருந்து வருகிறது. மொத்த சொத்தில் வாதிக்கு ஒதுங்கிய கீழ்புற 1/3 பங்கில் வீட்டின் கீழ்புற பாதி அமைந்துள்ளது. எனவே, வாய்கறார் பாகப்பிரிவினையில் மொத்த சொத்தில் கீழ்புற ஓரத்தில் 1/3 பங்கு வீட்டின் கீழ்புற பாதியை சேர்த்து ஒதுக்கப்பட்டுள்ளது.

**13)** வாய்கறார் பாகப்பிரிவினை ஏற்பட்ட சமயத்திலிருந்தே, வாதி மொத்த சொத்தில் கீழ்புறமுள்ள 1/3 பங்கையும், 1, 2 பிரதிவாதிகள் மொத்த சொத்தில் மேல்புறமுள்ள 2/3 பங்கையும் தொடர்ந்து அனுபவித்து வருகிறார்கள். எனவே, மொத்த சொத்தில் மேல்புறமுள்ள 2/3 பங்கை பொறுத்து பிரதிவாதிகளுக்கு அனுபவ பாத்தியமும் சிந்தித்துள்ளது. 1, 2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதிக்கு கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்ததை பொறுத்து கேள்வி கேட்க வாதிக்கு அருகதையில்லை.

**14)** தாவா சொத்துக்கு வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் பட்டா எண்.413 ல் கூட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது. பட்டா கூட்டாக இருப்பதால் மட்டுமே தாவா சொத்து பிரிவினையாகவில்லை என கட்சி செய்ய வாதி முரண்தடைபட்டுள்ளார். வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் உள்ள குடும்ப

பிரச்சினையை மனதில் வைத்துக் கொண்டு வாய்கறாராக பாகப்பிரிவினை ஆனதை மறைத்து பொய்யான விவரங்கள் கண்டு வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

15) தாவா சொத்து கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாக குறிப்பிட்டு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. வாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அறிவிப்பு எதுவும் பிரதிவாதிகளுக்கு அனுப்பவில்லை. இவ்வழக்கிற்கு எவ்விதமான வழக்குமூலமும் ஏற்படவில்லை. இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ள வழக்குமூலமும் பொய்யும், மோசடியும் ஆகும். தாவா மதிப்பீட்டு விவரம் சரியல்ல. தாவாவிற்கு செலுத்தப்பட்டுள்ள நீதிமன்ற கட்டணம் சரியல்ல. எனவே, இவ்வழக்கானது பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

**எழுவினாக்கள்:**

16) இரு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து கீழ்கண்ட எழுவினாக்களை இந்நீதிமன்றம் வனைந்துள்ளது:

| | |
|---|---|
| 1 | Whether there existed an oral partition among the Plaintiff, 1st Defendant and the 2nd Defendant in respect of the suit property as alleged by the Defendants? |
| 2 | Whether the Plaintiff is entitled to the relief of Partition and separate possession of 1/3rd share to the Plaintiff, 1st Defendant and the 2nd Defendant over the suit property by metes and bounds? |
| 3 | To what other relieves? |

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

**17)** வாதி தரப்பில் வாதியானவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வாதி தரப்பு சாட்சியமானது வா.சா.1 உடன் முடிக்கப்பட்டது. மறுபுறம், பிரதிவாதிகளின் தரப்பில் 2ம் பிரதிவாதியானவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.6 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் பி.வா.சா.1 உடன் முடித்து வைக்கப்பட்டது.

**<u>தீர்வு:</u>**

**<u>எழுவினா எண்.1:</u>**

**18)** தாவா சொத்து வாதி மற்றும் 2ம் பிரதிவாதியின் தந்தையும், 1ம் பிரதிவாதியின் கணவருமாகிய பெருமாள் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், மேற்படி பெருமாள் என்பவர் கடந்த 23.06.2006 அன்று நல்லாகவுண்டன்பட்டியில் வாதி மற்றும் 1, 2ம் பிரதிவாதிகளை தனது வாரிசுகளாக விட்டு விட்டு தாவா சொத்தைப் பொறுத்து எவ்வித விருப்புறுதி ஆவணமும் ஏற்படுத்தாமல் இறந்துவிட்டார் என்றும், மேற்படி தாவா சொத்து தற்போது மேற்சொன்ன பெருமாள் என்பவரின் வாரிசுகள் என்ற முறையில் வாதி மற்றும் 1, 2ம் பிரதிவாதிகளுக்கு மட்டுமே பாத்தியப்பட்ட சொத்து என்றும், எனவே தாவா சொத்து பாகம் பிரிக்கப்படாத கூட்டு குடும்ப சொத்து என்றும், அதில் வாதி மற்றும் 1, 2ம் பிரதிவாதிகளுக்கு தலா 1/3 பங்கு உரிமை உள்ளது என்றும், வாதி தரப்பில் இவ்வழக்கானது பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**19)** மறுபுறம், பிரதிவாதிகள் தரப்பில் வாதியால் குறிப்பிட்டுள்ள உறவுமுறையானது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், மேற்சொன்ன பெருமாள் என்பவர் கடந்த 23.06.2006 அன்று இறந்துவிட்டார் என்று வாதியால் சொல்லப்பட்டுள்ள சங்கதியும் பிரதிவாதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், தாவா சொத்து பெருமாளுக்கு பாத்தியப்பட்டு பெருமாள் இறந்த பின்பு இந்த வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளால் வாரிசுகள் என்ற முறையில் மேற்படி தாவா சொத்தானது அவர்களுக்கு பாத்தியப்பட்டு அதன்படி வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளாகிய மூவரும் தாவா சொத்துக்களை மூன்று சம பாகங்களாக பிரித்து, தாவா சொத்தில் உள்ள கீழ்புறத்தில் உள்ள 3ல் 1 பங்கு பாகம் வாதிக்கு ஒதுக்கப்பட்டும், மேல்புறத்தில் 2/3 பங்கு பாகம் 1, 2ம் பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து கடந்த 09.06.2023 அன்று இந்த 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்தில் தங்களது பாகத்தை 3ம் பிரதிவாதியாக 2ம் பிரதிவாதியின் மனைவிக்கு கிரைய ஆவணம் மூலம் கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், எனவே, தாவா சொத்தைப் பொறுத்து வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு இடையே ஏற்கெனவே பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது என்றும், அதனை மறுத்து வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்யவும் வாதிடப்பட்டது.

**20)** தாவா சொத்து மேற்சொன்ன வாதி, 2ம் பிரதிவாதியின் தந்தையும், 1ம் பிரதிவாதியின் கணவருமாகிய பெருமாள் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று இரு தரப்பினர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், மேற்சொன்ன பெருமாள் என்பவர் கடந்த 23.06.2006 அன்று எவ்வித விருப்புறுதி ஆவணமும் ஏற்படுத்தாமல் வாதி மற்றும் 1, 2ம் பிரதிவாதிகளை மட்டுமே வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார் என்ற

சங்கதியும் இரு தரப்பினர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, தாவா சொத்து மேற்சொன்ன பெருமாள் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று சங்கதியையும் மேற்சொன்ன பெருமாள் எவ்வித விருப்புறுதி ஆவணமும் தாவா சொத்தைப் பொறுத்து ஏற்படுத்தாமல் வாதி மற்றும் 1, 2ம் பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார் என்ற சங்கதியையும் இவ்வழக்கில் பிரச்சினைக்குரிய சங்கதிகளாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. இருப்பினும், தாவா சொத்தைப் பொறுத்து மேற்சொன்ன பெருமாள் இறந்த உடன்காலில் வாதி மற்றும் 1, 2ம் பிரதிவாதிகளுக்கு இடையே ஏற்கெனவே பாகப் பிரிவினை வாய்கறாராக ஏற்பட்டுவிட்டதாக பிரதிவாதிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. எனவே, மேற்படி வாய்கறார் பாகப்பிரிவினை நிரூபணம் செய்யும் சட்டச்சுமையானது பிரதிவாதிகளுக்கே உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, மேற்சொன்ன எழுவினாவை இந்நீதிமன்றம் வனைந்துள்ளது.

**21)** வாதி தனது வழக்கை நிரூபணம் செய்ய வாதியானவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.1 தனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் வாதி வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளை மீண்டும் வலியுறுத்திக் கூறி சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.ஆ.1 ஆவணமானது, செம்பியநத்தம் கிராமத்தின் நத்தம் சிட்டாவின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கடவூர் அவர்களால் பொது தகவல் அலுவலர் என்ற முறையில் வழங்கப்பட்ட நத்தம் சிட்டாவின் சான்று நகல் ஆகும். மேலும், வா.சா.ஆ.1யைப் பரிசீலனை செய்கையில், தாவா சொத்தின் பழைய புல எண்.207/1 என்றும், தற்கால புல எண் செம்பியநத்தம் கிராமத்தில் உள்ள

புல எண்.207/21 என்றும், அதில் ஹெக்.0.01.19 ஏர்ஸ் நிலம் மூ.பெருமாள் என்ற பெயரில் நத்தம் சிட்டா ஆவணத்தில் இடம் பெற்றுள்ளது என்பதையும் அறிய முடிகின்றது. வா.சா.ஆ.2 ஆவணமானது, வாதியால் மேற்படி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட செம்பியநத்தம் கிராமம் புல எண்.207 ற்கான கிராம நில புல வரைபடத்தின் சான்றிட்ட நகல் ஆகும். வா.சா.ஆ.3 ஆவணமானது தாவா சொத்தின் புகைப்படம் (2 எண்ணிக்கை) மற்றும் குறுந்தகடு ஆகும். மேற்படி புகைப்படம் மற்றும் குறுந்தகடு ஆகியவை பாரதிய சாட்சிய அதிநிய சட்டத்தின்படி சான்றிதழ் இணைக்கப்படாமல் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. சட்டத்தின்படி உரிய சான்றிதழ் இணைக்கப்படாமல் மேற்படி புகைப்படம் மற்றும் குறுந்தகடு ஆகியவை வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணங்கள் இல்லை என்று கருதி மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்ய அவசியம் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**22)** வா.சா.ஆ.4 ஆவணமானது, கடந்த 21.03.2019 ம் தேதியிட்ட மேற்சொன்ன பெருமாள் என்பவரது வாரிசு சான்றிதழின் பதிவிறக்க நகல் ஆகும். மேற்படி வா.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், மேற்சொன்ன பெருமாள் என்பவருக்கு 1ம் வாதி மகன் என்றும், 1ம் பிரதிவாதி மனைவி என்றும், 2ம் பிரதிவாதி மகன் என்றும் காண்பிக்கப்பட்டு மேற்படி 3 நபர்கள் மட்டுமே மேற்சொன்ன பெருமாளின் வாரிசுகள் என்று காண்பிக்கப்பட்டு மேற்படி வாரிசு சான்றிதழானது பெறப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. வா.சா.ஆ.5 ஆவணமானது, மேற்சொன்ன பெருமாள் என்பவரது குடும்ப வம்சாவழியை காட்டும் குடும்ப வம்சாவழி பட்டியல் ஆகும். மேற்படி வா.சா.ஆ.6 யைப்

பரிசீலனை செய்கையில், மேற்சொன்ன தேதியில் இவ்வழக்கின் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளால் இவ்வழக்கின் 3ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் வாதியின் 1/3 பாகத்தை தவிர மீதமுள்ள 3ல் 2 பங்கு பாகத்தை தகுந்த மறுபயனுக்கு கிரையம் செய்து கொடுத்ததாக காண்பிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி சொத்து விவரத்தில் மேற்சொன்ன தாவா சொத்தில் கட்டிடங்கள் எதுவும் இல்லை என்றும், அது காலி மனையாக உள்ளது என்றும் காண்பிக்கப்பட்டு, மேற்படி வீடு கட்டும் காலி மனை கிரைய ஆவணமானது 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு இடையே ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**23)** அதுமட்டுமல்லாமல், மேற்படிஆவணத்தை பரிசீலனை செய்கையில், இவ்வழக்கின் தாவா சொத்தானது வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு, வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகள் பெயரில் கூட்டு பட்டா ஏற்பட்டு, வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகள் ஆகிய அனைவரது சுவாதீனத்திலும் வைத்து அனுபவம் செய்து வரும் வீடு கட்டும் காலி மனை நிலத்தை கிரையம் செய்து கொடுப்பதாக காண்பிக்கப்பட்டு மேற்படி கிரைய ஆவணமானது ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. அதுமட்டுமல்லாமல், மேற்படி கிரைய ஆவண சொத்து விவரத்தில் மட்டுமே தாவா சொத்தின் கீழ்புறம் பொதுவில் 3ல் 1பாகமாகிய 427 சதுரடி வாதிக்கு பாத்தியப்பட்ட காலி மனை நிலம் போக மீதமுள்ள 1, 2ம் பிரதிவாதிகளின் பாகமாகிய பொதுவில் 3ல் 2 பங்காகிய 854 சதுரடி அளவுள்ள காலி மனை நிலத்தை மட்டும் 3ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது.

**24)** வா.சா.ஆ.7 ஆவணமானது, கடந்த 12.08.2025 தேதியிட்ட மேற்சொன்ன பெருமாள் என்பவரது இறப்பு சான்றிதழின் சான்று நகல்

ஆகும். மேற்படி பெருமாள் என்பவரது இறப்பு சான்றிதழைப் பரிசீலனை செய்கையில், மேற்சொன்ன பெருமாள் என்பவர் கடந்த 23.06.2006 அன்று நல்லாக்கவுண்டன்பட்டி, செம்பியநத்தம் கிராமம் என்ற முகவரியில் இறந்துவிட்டார் என்று அவரது இறப்பானது பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. மேலும், மேற்சொன்ன பெருமாளின் தந்தை பெயர் முத்தன் என்பது மேற்படி ஆவணத்தைப் பரிசீலனை செய்ததில் அறிய முடிகின்றது.

**25)** அதனைத் தொடர்ந்து, வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், தாவா சொத்து அமைந்துள்ள புல எண்.207/21ல் மொத்த ஹெக்.0.1.09 ஏர்ஸ் நிலம் உள்ளது என்றும், அது வீட்டுமனை என்றும், மேற்படி நிலத்தில் உள்ள வீடானது தனது தந்தையால் கட்டப்பட்டது என்றும், தான் குடியிருக்கும் வீட்டின் கதவு எண்.3/14 என்ற விலாசம் தாவா சொத்திற்குள் இருக்கும் ஒரு பகுதிதான் என்றும், தாவா சொத்தில் உள்ள ஒரே வீட்டில்தான் வாதியும், 1, 2 பிரதிவாதிகளும் ஒன்றாக வசித்து வருவதாகவும் பிரதிவாதிகள் கூறியுள்ளபடி வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு இடையே எவ்வகையான வாய்க்காரர் பாகப் பிரிவினையும் ஏற்படவில்லை என்றும், 1,2 பிரதிவாதிகளால் 3ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ள வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தில் வாதி கையொப்பம் செய்யவில்லை என்றும், தாவா சொத்து தற்போது வரை பாகப்பிரிவினை செய்யப்படாத கூட்டுக் குடும்ப சொத்து என்றும் கூறி வாதியின் வழக்கை எவ்வகையிலும் முரண்படாமல் உறுதியூட்டி சாட்சியம் அளித்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

**26)** மறுபுறம், மேற்படி தாவா சொத்தைப் பொறுத்து வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகளுக்கு இடையே மேற்சொன்ன பெருமாள் என்பவர் இறந்த

உடன்காலிலே தாவா சொத்துக்கள் வாய்க்காரராக பாகப்பிரிவினை செய்யப்பட்டதாகவும், தலா 3ல் 1 பங்கு பாகம் வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டதாகவும் பிரதிவாதிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. மேற்சொன்ன பிரதிவாதிகள் தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய 2ம் பிரதிவாதியானவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.6 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பி.வா.சா.1 தனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் பிரதிவாதிகளின் வழக்கை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார்.

**27)** பி.சா.ஆ.1 ஆவணமானது கடந்த 19.09.1980ம் தேதியிட்ட வீட்டுமனை ஒப்படைவு நமுனாவின் அசல் ஆவணம் ஆகும். மேற்படி பி.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், நல்லாகவுண்டன்பட்டி செம்பியநத்தம் கிராமத்தில் உள்ள புல எண்.207/1ல் உள்ள ஏக்கர் 0.03 சென்ட் நிலமானது குறிப்பிட்ட நான்கெல்லைகள் கண்டு முத்து வன்னான் மகன் பெருமாள் என்பவருக்கு மேற்படி வீட்டு மனையானது ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேற்படி பி.சா.ஆ.1 ஆவணத்தை வா.சா.ஆ.1 ஆவணத்துடன் ஒப்பிட்டு பார்க்கையில் மேற்படி பி.சா.ஆ.1 பட்டாவானது செம்பியநத்தம் கிராமத்தில் உள்ள பழைய புல எண்.207/1 (புதிய புல எண்.207/21) என்கிற தாவா சொத்திற்கு வாதி மற்றும் 2ம் பிரதிவாதியின் தந்தையும், 1ம் பிரதிவாதியின் கணவருமாகிய பெருமாள் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ள வீட்டு மனை ஒப்படைவு என்பதை அறிய முடிகின்றது. எனவே, பி.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனைசெய்கையில் தாவா சொத்து ஆதீயில் வாதி மற்றும் 2ம் பிரதிவாதியின் தந்தையும், 1ம் பிரதிவாதியின் கணவருமாகிய பெருமாள் என்பவருக்கு வீட்டு மனைக்காக ஒப்படைக்கப்பட்ட நிலம் என்பதை அறிய முடிகின்றது.

**28)** பி.சா.ஆ.2 ஆவணமானது, கடந்த 06.04.2022 தேதியிட்ட மனைவரி தோராய பட்டாவின் சான்று நகல் ஆகும். மேற்படி பி.சா.ஆ.2 யைப் பரிசீலனை செய்கையில், மனைவரி பட்டா எண்.413 ல் செம்பியநத்தம் கிராமத்தில் அமைந்துள்ள புல எண்.207/21 ல் ஹெக்.0.01.19 ஏர்ஸ் அளவுள்ள வீட்டுமனை நிலத்திற்கு வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் மேற்படி கூட்டு பட்டாவானது வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. பி.சா.ஆ.3 ஆவணமானது, கடந்த 09.06.2023 தேதியிட்ட வீடு கட்டும் காலி மனை நில கிரைய பத்திரத்தின் அசல் ஆவணம் ஆகும். மேற்படி ஆவணத்தின் பதிவிறக்க நகலானது வாதி தரப்பில் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**29)** பி.சா.ஆ.4 ஆவணமானது, கடந்த 18.12.2024 தேதியிட்ட பட்டா எண்.413 ற்கான பதிவிறக்க நகலாகும். மேற்படி பட்டாவை பரிசீலனை செய்கையில், பட்டா எண்.413 ல் செம்பியநத்தம் கிராமத்தில் அமைந்துள்ள புல எண்.207/21 ல் உள்ள ஹெக்.0.1.19 ஏர்ஸ் நிலத்திற்கு வாதி பெயரிலும், 3 ம் பிரதிவாதியாகிய 2 ம் பிரதிவாதியின் மனைவி பெயரிலும், மேற்படி தாவா சொத்திற்கான கூட்டு பட்டா ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. மேற்படி பி.சா.ஆ.4 ஆவணத்தைப் பரிசீலனை செய்கையில், பி.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் கிரையம் பெற்றதன் அடிப்படையில், மேற்படி பி.சா.ஆ.4 பட்டாவில் 3 ம் பிரதிவாதியின் பெயரானது இடம் பெற்றுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**30)** பி.சா.ஆ.5 ஆவணமானது, கடந்த 15.03.2006 தேதியிட்ட பெருமாள் பெயரில் ஏற்பட்ட வீட்டு வரி இரசீதின் அசல் ஆகும். மேற்படி பி.சா.ஆ.5 யைப் பரிசீலனை செய்கையில், அதில் கதவு எண்.3/14 என்று குறிப்பிட்டு காண்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி கதவு எண் தாவா

சொத்திற்கானது என்பதால் மேற்படி வீட்டு வரி இரசீதானது வாதியின் தந்தையாகிய பெருமாள் என்பவரால் தாவா சொத்தில் அமைந்துள்ள வீட்டிற்கு செலுத்தப்பட்டுள்ள இரசீது என்பதை அறிய முடிகின்றது. பி.சா.ஆ.6 ஆவணமானது, 2ம் பிரதிவாதியால் பல்வேறு தேதிகளில் கட்டப்பட்டுள்ள வீட்டு வரி இரசீதுகளின் அசல் (10 எண்ணிக்கை) ஆகும். மேற்படி வா.சா.ஆ.6 யைப் பரிசீலனை செய்கையில், பல்வேறு காலகட்டத்தில் 2ம் பிரதிவாதியால் செம்பியநத்தம் கிராமத்தில் அமைந்துள்ள கதவு எண்.3/14A என்ற வீட்டிற்கும், கதவு எண்.3/17ல் உள்ள வீட்டிற்கும் செலுத்தப்பட்டுள்ள வீட்டு வரி இரசீதுகள் என்பதை பரிசீலனை செய்ததின் அடிப்படையில் அறிய முடிகின்றது. மேற்படி ரசீதுகளில் இரண்டு கதவு எண்கள் கண்டு காண்பிக்கப்பட்டுள்ளது.

**31)** அதனைத் தொடர்ந்து, பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், தாவா சொத்திற்கான பட்டா எண்.413ல் தனது தந்தைக்கு தற்காலிக பட்டா வழங்கப்பட்டது என்றும், ஆனால் எந்த வருடம் வழங்கப்பட்டது என்று தனக்கு தெரியாது என்றும், சுமார் 3 சென்ட் அளவுள்ள நிலத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி பட்டா நிலத்தில் தற்போது ஒரு ஓட்டுவீடு உள்ளது என்றும், மேற்படி வீடு வடக்குப் பார்த்து உள்ளது என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி பட்டா நிலத்தில் உள்ள ஓட்டு வீட்டிற்கு மின் இணைப்பானது தனது பெயரில் உள்ளது என்றும், மேற்படி மின் இணைப்பானது கடந்த 2006ல் தனது பெயரில் பெறப்பட்டது என்றும், மின் வாரியத்தால் வழங்கப்பட்ட ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளதாகவும் பி.வா.சா.1 குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேலும், தனது தந்தையின் இறப்பிற்கு பிறகு தாவா சொத்தை மூன்று சம பாகங்களாக வாய்கரராக பிரித்துக் கொண்டதாகவும், ஆனால் ஆவணம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றும், ஊர் முறைப்படி

பிரித்துக் கொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், பி.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் வீடு கட்டும் காலி மனை நிலம் என்று மட்டுமே குறிப்பிட்டுள்ளது என்றும், அதில் வீடு இருந்ததாக ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். அதனைத் தொடர்ந்து, பி.சா.ஆ.3 கிரைய ஆவணம் ஏற்பட்ட பின்புதான் தனது மனைவியாகிய 3ம் பிரதிவாதி பெயரில் பி.சா.ஆ.4 தனிப்பட்டா பெறப்பட்டுள்ளது என்றும், மேற்படி பி.சா.ஆ.4 தனிப்பட்டாவில் பழைய நிலத்தில் உள்ள பட்டா எண்ணே இதிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**32)** இரு தரப்பு சாட்சியங்களையும், வழக்கு கோப்புகளையும் கவனமுடன் பரிசீலனை செய்கையில், தாவா சொத்து ஆதியில் வாதி மற்றும் 2ம் பிரதிவாதியின் தந்தையும், 1ம் பிரதிவாதியின் கணவருமாகிய பெருமாள் என்பவருக்கு அரசாங்கத்தால் வீட்டுமனை ஒப்படைவின் மூலம் வழங்கப்பட்டுள்ளது என்பதை பி.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் அறிய முடிகின்றது. மேலும், மேற்படி பெருமாள் என்பவர் கடந்த 23.06.2006 அன்று இறந்து விட்டார் என்றும், அவர் இறக்கும் சமயத்தில் வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளை மட்டுமே அவருக்கு வாரிசாக விட்டு இறந்துவிட்டார் என்ற சங்கதியை வா.சா.ஆ.4 பெருமாளின் வாரிசு சான்றிதழை மற்றும் வா.சா.ஆ.7 பெருமாளின் இறப்புச் சான்றிதழ் ஆகியவற்றைப் பரிசீலனை செய்ததில் அறிய முடிகின்றது. எனவே, மேற்படி பெருமாளின் இறப்பு மற்றும் வாரிசு விவரங்களை வாதி தரப்பில் நிரூபணம் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**33)** தாவா சொத்து மேற்சொன்ன பெருமாளுக்கு பாத்தியப்பட்டதாக உள்ள நிலையில், மேற்சொன்ன பெருமாள் தாவா சொத்தைப் பொறுத்து

எவ்வித விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்காமல் வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளை மட்டுமே வாரிசாக விட்டு இறந்துவிட்ட நிலையில், தாவா சொத்துக்களுக்கு வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் மட்டுமே வாரிசு உரிமைப்படி உரிமை பெற்றுள்ளார்கள் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**34)** இந்நிலையில், வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு இடையே மேற்சொன்ன பெருமாள் இறந்த உடன்காலில் வாய்கரராக பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது என்றும், அதில் தலா 1/3 பங்கு பாகம் வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு பிரிக்கப்பட்டது என்றும் பிரதிவாதிகள் தரப்பில் குறிப்பிட்டு கட்சி செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தை வாய்கரராக வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் தலா 1/3 பங்கு பாகம் பிரித்து கொண்டதாக பிரதிவாதிகளால் கூறப்பட்டுள்ள நிலையில், வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேற்சொன்ன பெருமாள் என்பவர் கடந்த 23.06.2006 அன்று இறந்துவிட்ட பிறகு வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் தாவா சொத்திற்கு கூட்டு பட்டா ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. அதுமட்டுமல்லாமல், மேற்படி பெருமாள் இறந்த கடந்த 2006 ம் வருடத்தில் இருந்து பி.சா.ஆ.3 கிரைய ஆவணம் ஏற்படுத்தப்பட்ட தேதி முன்பு வரை தாவா சொத்திற்கு வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் கூட்டு பட்டாவாக பட்டா இருந்துள்ளது என்பதை அறிய முடிகின்றது. அதுமட்டுமல்லாமல், தாவா சொத்தில் ஒரு ஓட்டுவீடு உள்ளது என்பதை வாதி மற்றும் பிரதிவாதிகள் இருவரும் தங்களது வழக்குகளில் ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்பதையும் அறிய முடிகின்றது.

**35)** மேலும், மேற்படி ஓட்டுவீட்டின் கதவு எண்.3/14 என்று இரு தரப்பினர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், தான் குடியிருக்கும் செம்பியநத்தம் கிராமத்தில் உள்ள தனது பட்டா நிலத்தில் உள்ள வீட்டின் கதவு எண்.3/14 என்று ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். அதுமட்டுமல்லாமல், பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையிலும், தாவா சொத்தில் ஒரே ஓட்டுவில்லை வீடு உள்ளது என்பதை ஒப்புக்கொண்டு உள்ளார்கள் என்பதை அறிய முடிகின்றது. மேலும், பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையிலும், தாவா சொத்தில் ஒரேயொரு ஓட்டு வில்லை வீடு மட்டுமே உள்ளது என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சங்கதிகளை பரிசீலனை செய்கையில், தாவா சொத்தில் ஒரேயொரு ஓட்டு வில்லை வீடு மட்டுமே உள்ள நிலையில், வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் மேற்படி தாவா சொத்தில் அமைந்துள்ள வீட்டில் கூட்டு அனுபவம் மற்றும் சுவாதீனத்திலும் இருந்து வருகிறார்கள் என்பதை அறிய முடிகின்றது.

**36)** அதுமட்டுமல்லாமல், 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகளால் 3 ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தப்பட்ட பி.சா.ஆ.3 கிரைய ஆவணத்தின் அசல் ஆவணத்தை பரிசீலனை செய்கையிலும், தாவா சொத்தாகிய செம்பியநத்தம் கிராமத்தில் அமைந்துள்ள புல எண்.207/21ல் உள்ள ஹெக்.0.1.19 ஏர்ஸ் நிலமானது காலி மனையாக உள்ளது என்றும், மேற்படி நிலமானது வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் ஆகிய அனைவரது சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருவதாக வாசகங்கள் இடம் பெற்று மேற்படி பி.சா.ஆ.3 கிரைய ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில் அறிய முடிகின்றது.

**37)** இந்நிலையில், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், தாவா சொத்தில் உள்ள ஓட்டு வில்லை வீடானது தனது தந்தையால் கட்டப்பட்ட வீடு என்ற குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். அதுமட்டுமல்லாமல், தாவா சொத்தில் ஒரேயொரு ஓட்டு வில்லை வீடு உள்ளது என்பதை பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையிலும், பி.வா.சா.1 தனது முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணையிலும் ஒப்புக்கொண்டும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். அவ்வாறு இருக்கும் நிலையில், மேற்படி சங்கதிகளை மறைத்து, கடந்த 09.06.2023 அன்று 1, 2 பிரதிவாதிகளால் 3ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட பி.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் தாவா சொத்து வெறும் வீடு எதுவும் இல்லாது காலிமனையாகவே உள்ளதாக காண்பிக்கப்பட்டு, மேற்படி கிரையமானது வீடு கட்டும் காலி மனை நிலம் என்று குறிப்பிட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தாவா சொத்தில் அமைந்துள்ள வீட்டுமனையை மறைத்து மேற்படி கிரைய ஆவணமானது 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளால் 3ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**38)** அவ்வாறு இருப்பினும், மேற்சொன்ன பி.சா.ஆ.3 ஆவணத்தில் தாவா சொத்தானது வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் ஒன்றாக இருந்து வருவதாக காண்பிக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தினைப் பரிசீலனை செய்ததின் அடிப்படையிலும், தாவா சொத்தில் வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் மேற்சொன்ன கிரைய ஆவணம் ஏற்படுத்தும் தேதி வரை கூட்டு அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் இருந்து வந்துள்ளார்கள் என்பதை அறிய முடிகின்றது. அதுமட்டுமல்லாமல், பி.சா.ஆ.3 ஆவணத்தில், தாவா சொத்தை மேற்சொன்ன பெருமாள் இறந்து உடன்காலில் வாதி மற்றும் 1, 2

பிரதிவாதிகள் வாய்கரராாக பாகப் பிரிவினை செய்து கொண்டதாக வாசகங்கள் எதுவும் பி.சா.ஆ.3 ஆவணத்தில் இடம் பெறவில்லை என்பதை அறிய முடிகின்றது. மாறாக, பி.சா.ஆ.3 ஆவணத்தின் சொத்து விவரத்தில் மட்டுமே தாவா சொத்தில் கீழ்புறம் வாதிக்கு ஒதுங்கிய 1/3 பங்கு என்றும், மேல்புறம் உள்ள 1, 2 பிரதிவாதிகளின் பங்காகிய 2/3 பங்கு என்றும், மேற்படி 2/3 பங்கை மட்டுமே 3ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுக்கப்பட்டதாகவும் கூறி மேற்படி கிரைய ஆவண சொத்து விவரத்தில் இடம் பெற்றுள்ளன. அது தவிர பி.சா.ஆ.3 ஆவணத்தில் தாவா சொத்தைப் பொறுத்து வாய்கரராக வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் மேற்சொன்ன பெருமாளின் இறப்பிற்கு உடன்காலில் வாய்கரராக பாகப்பிரிவினை செய்து கொண்டதாக எவ்வித வாசகமும் அதில் குறிப்பிடவில்லை.

**39)** எனவே, மேற்படி ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், தாவா சொத்து பாகம் பிரிக்கப்படாத கூட்டு குடும்ப சொத்து என்பதை அறிய முடிகின்றது. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 2ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள வீட்டு வரி இரசீதுகளில் இரண்டு வேறு கதவு எண்கள் குறிப்பிட்டு காண்பிக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கும் தாவா சொத்திற்கும் எவ்வகையில் தொடர்புள்ளது என்பதை பிரதிவாதிகள் தரப்பில் நிரூபணம் செய்ய தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், 3ம் பிரதிவாதி பெயரில் தனிப்பட்டா எதுவும் ஏற்படவில்லை என்பதை அறிய முடிகின்றது. மாறாக, தாவா சொத்திற்கு வாதி மற்றும் 3ம் பிரதிவாதி பெயரில் மேற்சொன்ன பி.சா.ஆ.3 கிரைய ஆவணத்திற்கு பின்பு மொத்த சொத்திற்கும் சேர்த்துதான் கூட்டு பட்டாவானது ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. அவ்வாறு பிரதிவாதிகள் தரப்பில் கூறியுள்ளபடி வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு இடையே மேற்சொன்ன பெருமாளின் இறப்பிற்கு உடன்காலில் தாவா சொத்தைப் பொறுத்து வாய்கறார்

பாகப்பிரிவினை ஏற்பட்டிருந்தால், வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்தை பிரிவினை செய்து தனித்தனியாக அனுபவம் செய்து வந்து இருப்பார்கள் என்றும், ஆனால் தாவா சொத்தில் அமைந்துள்ளது ஒரேயொரு ஓட்டு வில்லை வீடுதான் உள்ளது என்பதை அறிய முடிகின்றது. மேற்படி ஓட்டு வில்லை வீட்டில் மட்டுமே வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் நாளது தேதி வரை கூட்டாக அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வந்துள்ளார்கள் என்ற சங்கதியை வாதி தரப்பில் நிரூபணம் செய்துள்ளதாகவும் இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**40)** அதேபோல், மேற்படி தாவா சொத்தைப் பொறுத்த பட்டாவானது பி.சா.ஆ.3 கிரைய ஆவணம் ஏற்படுத்தப்பட்ட தேதி முன்பு வரை கூட்டு பட்டாவாகவே வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ள நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் கூறியுள்ளபடி வாய்கறார் பாகப்பிரிவினை ஏற்பட்டிருந்தால், வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு தனித்தனியாக பட்டா ஏற்பட்டு, தனித்தனியாக சொத்துக்கள் உட்பிரிவு செய்யப்பட்டு, அவரவர்களுக்கு பிரிந்த நிலங்களை அவரவர்கள் பெயருக்கு தனிப்பட்டா ஏற்பட்டிருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. அதுமட்டுமல்லாமல், அவ்வாறு வாய்கறார் பாகப்பிரிவினை ஏதும் ஏற்பட்டிருந்தால், பி.சா.ஆ.3 ஆவணம் ஏற்பட்ட பின்னிட்டாவது 3ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்து தனியாக உட்பிரிவு செய்யப்பட்டு, தனிப்பட்டாவானது ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால், 3ம் பிரதிவாதி பெயரில் தனிப்பட்டா எதுவும் ஏற்படவில்லை என்பதை அறிய முடிகின்றது. மாறாக, வாதி மற்றும் 3ம் பிரதிவாதி ஆகிய இருவர் பெயரிலும் தாவா சொத்தைப் பொறுத்து கூட்டு பட்டாவே அமைந்துள்ளது என்பதை அறிய முடிகின்றது. மேலும், மேற்படி கூட்டு பட்டாவானது பி.சா.ஆ.3 கிரைய ஆவணத்தின் அடிப்படையிலேயே, 3ம் பிரதிவாதியால் பெறப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**41)** மேலும், 2ம் பிரதிவாதி தனக்குப் பிரிந்த பகுதியில் உள்ள வீட்டிற்கு தனது பெயரில் மின் கட்டணம் செலுத்தி வருவதாக குறிப்பிட்டு தனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், மேற்கண்ட தாவா சொத்தில் தனக்குப் பிரிந்த பங்கிற்கு தனது பெயரில் ஏற்பட்ட மின் கட்டண இரசீது மற்றும் மின் அட்டை ஆகியவற்றை தனது தரப்பில் தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், வழக்கு கோப்புகள் மற்றும் ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், பிரதிவாதிகள் தரப்பில் 2ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட மின் அட்டையோ, மின் கட்டண இரசீதோ எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அவ்வாறு பிரதிவாதிகள் கூறியபடி, தாவா சொத்தைப் பொறுத்து வாய்கரராக பாகப்பிரிவினை ஏற்பட்டு, 1, 2 பிரதிவாதிகள் தங்களுக்கு பிரிந்த வீட்டிற்குத் தனியாக மின் கட்டணங்கள் செலுத்தி வந்திருந்தால், மேற்கண்ட மின் அட்டை மற்றும் மின் கட்டண இரசீதுகளை பிரதிவாதிகள் தாக்கல் செய்திருப்பார்கள் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. ஆனால், பிரதிவாதிகள் தரப்பில், எவ்வகையான தனிப்பட்ட மின் கட்டண இரசீதுகளோ, அல்லது மின் அட்டையோ தாக்கல் செய்யப்படவில்லை என்பதை அறிய முடிகின்றது.

**42)** இந்நிலையில், மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் **வினிதா சர்மா எதிர் ராகேஷ் சர்மா AIR 2020 SC. 3717** என்ற வழக்கில், மேற்கோள் காட்டி சொல்லப்பட்டுள்ள வாய்கறார் பாகப்பிரிவினை பொறுத்த மேற்கோள்களை இவ்வழக்கில் குறிப்பிட்டு காண்பிக்க இந்நீதிமன்றம் கடமைப்பட்டுள்ளது. மேற்சொன்ன **வினிதா சர்மா எதிர் ராகேஷ் சர்மா AIR 2020 SC.3717** என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் பின்வருமாறு மேற்கோள் காட்டியுள்ளது. “ A Plea of oral partition can not be accepted as the statutory recognized mode of partition effected by a deed of partition duly registered under the

provisions of the Registration Act, 1908 or effected by a decree of a Court. However, in exceptional cases where plea of oral partition is supported by public documents and partition is finally evinced in the same manner as if it had been effected by a decree of a Court, it may be accepted. The plea of partition based on oral evidence alone can not be accepted and to be rejected outrightly."

43) எனவே, மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் மேற்சொல்லப்பட்ட வழக்கில் மேற்கோள் காட்டியபடி, வாய்கறார், பாகப்பிரிவினையானது பதிவுச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்திற்கு சமமாகவோ, அல்லது நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் பாகப்பிரிவினை தீர்ப்பாணைக்கு சமமாகவோ ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என்றும், இருப்பினும் விதி விலக்கான வழக்குகளில் மேற்சொன்ன வாய்கறார் பாகப்பிரிவினையானது வாய்மொழி சாட்சியங்களின் அடிப்படையில் மட்டுமே நிரூபணம் செய்யப்படமுடியாது என்றும், பொது ஆவணங்கள் மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே வாய்கறார் பாகப்பிரிவினையை நிரூபணம் செய்யமுடியும் என்றும் தெளிவாக மேற்கோள் காட்டியுள்ளது.

44) இந்நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தைப் பொறுத்து வாய்கறார் பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டதாக வாய்மொழியாக மட்டுமே சாட்சியம் அளித்திருந்தாலும், பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் யாவும் மேற்சொன்ன தாவா சொத்தைப் பொறுத்த வாய்கறார் பாகப்பிரிவினையை நிரூபணம் செய்ய போதுமான ஆவணங்களாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மூலம் வாய்கறார் பாகப்பிரிவினை ஏற்பட்டதை நிரூபணம் செய்ய பிரதிவாதிகள் தவறியுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், இவ்வழக்கு ஆவணங்கள் மற்றும்

வழக்கு கோப்புகளைப் பரிசீலனை செய்கையில், தாவா சொத்தைப் பொறுத்து, பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்ற சாத்தியக்கூறுகளின் மேம்பட்ட நிலையானது வாதிக்கே ஆதரவாக உள்ளதாக மேற்படி ஆவணங்களைப் பரிசீலனை செய்ததின் அடிப்படையில் இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, பிரதிவாதிகள் தாவா சொத்தைப் பொறுத்து வாய்கறார் பாகப்பிரிவினை ஏற்கெனவே ஏற்பட்டுவிட்டதாக சொல்லியுள்ளதை நிரூபணம் செய்ய தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, எழுவினா எண்.1ற்கு பிரதிவாதிகளுக்கு எதிராகவும், வாதிக்கு ஆதரவாகவும் இந்நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**எழுவினா எண்.2:**

**45)** தாவா சொத்து வாதி மற்றும் 2ம் பிரதிவாதியின் தந்தையும், 1ம் பிரதிவாதியின் கணவருமாகிய பெருமாள் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், மேற்சொன்ன பெருமாள் என்பவர் வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளை மட்டுமே வாரிசுகளாக விட்டு எவ்வித விருப்புறுதி ஆவணமும் ஏற்படுத்தாமல் இறந்துவிட்ட நிலையில், தாவா சொத்திற்கு வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளே மேற்படி பெருமாள் என்பவரின் வாரிசுகள் என்றும், எனவே தாவா சொத்தை நளஇளப்பம் சரிகட்டி வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு தலா 1/3 பங்கு பாகம் பிரிவினை செய்து கொடுக்க முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டி வாதியால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**46)** தாவா சொத்து மேற்சொன்ன பெருமாளுக்கு பாத்தியப்பட்டு, மேற்சொன்ன பெருமாள் என்பவர் வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளை மட்டுமே வாரிசாக விட்டு தாவா சொத்தைப் பொறுத்து எவ்வித விருப்புறுதி

ஆவணமும் ஏற்படுத்தாமல் கடந்த 23.06.2006 அன்று இறந்துவிட்டார் என்ற சங்கதி வாதி தரப்பில் நிரூபணம் செய்து விட்டதாக மேற்படி எழுவினாவில் இந்நீதிமன்றம் தீர்வு கண்டுள்ளது. மேலும், தாவா சொத்தைப் பொறுத்த பாகப்பிரிவினை ஏற்படாமல் வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளின் கூட்டுக் குடும்ப சொத்தாவே இதுநாள் வரை இருந்து வந்துள்ளதாக மேற்கண்ட எழுவினாவில் இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. தாவா சொத்து பிரிக்கப்படாத கூட்டு குடும்ப சொத்தாக உள்ள நிலையில், மேற்சொன்ன பெருமாள் என்பவருக்கு வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் மட்டுமே முதல் நிலை வாரிசுகளாக உள்ளார்கள் என்பதை அறிய முடிகின்றது.

**47)** இந்நிலையில், இந்து வாரிசுரிமைச் சட்டம், 1956, பிரிவு 8 ன் கீழ் ஒரு இந்து மதத்தைச் சேர்ந்த ஆண் நபர் தனக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்தைப் பொறுத்து எவ்வித விருப்புறுதி ஆவணமும் ஏற்படுத்தாமல் இறந்துவிட்டால், மேற்படி சொத்துக்கள் யார் யாருக்கு எவ்வகையில் பிரிந்து செல்லும் என்று மேற்படி சட்டப்பிரிவு 8 ஆனது வழிவகை செய்துள்ளது. அதன்படி, இந்து வாரிசுரிமை சட்டம், 1956, பிரிவு 8 உடன் இணைந்த அட்டவணையைப் பரிசீலனை செய்கையில், இறந்து போன இந்து ஆண் நபருக்கு முதல் நிலை வாரிசாக மனைவி மற்றும் மகன்கள் வருவார்கள் என்று மேற்படி சட்டமானது வழிவகை செய்துள்ளது என்பதை அறிய முடிகின்றது. இந்நிலையில், வாதி மற்றும் 2 ம் பிரதிவாதி மேற்சொன்ன பெருமாள் என்பவரின் மகன்கள் என்றும், 1 ம் பிரதிவாதி மேற்படி பெருமாள் என்பவரின் மனைவி என்றும் இருதரப்பினர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டு வாதியால் நிரூபணமும் செய்யப்பட்டுள்ளது. எனவே, வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளே இறந்து போன பெருமாள் என்பவருக்கு சட்டப்படியான 1 ம் நிலை வாரிசுகளாக உள்ள நிலையில், மேற்படி பெருமாளுக்கு

பாத்தியப்பட்ட தாவா சொத்துக்களில் சமஉரிமை உள்ளது என்றும் வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகள் தாவா சொத்தினை சமமாக பிரிவினை செய்து கொள்ள அனைத்து வகையிலும் தகுதியுடையவர்கள் என்றும் இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**48)** இவ்வாறு இருக்கும் நிலையில், தாவா சொத்தை நளஇளப்பம் சரிகட்டி மூன்று சமபாகங்களாக பிரித்து அதில் தலா 1/3 பாகங்களை வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு முறையாக பிரித்துக் கொடுக்க வாதி கோரியுள்ள முதல்நிலை தீர்ப்பாணையானது, வாதிக்கு அனைத்து வகையிலும் கிடைக்கத்தக்கது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, தாவா சொத்தில் வாதிக்கு 1/3 பங்கு பாகமும், 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளுக்கு தலா 1/3 பங்கு பாகமும் உள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. எனவே, வாதி கோரிய பாகப்பிரிவினை பரிகாரமானது வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. எனவே, எழுவினா எண்.2, வாதிக்கு ஆதரவாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

**<u>எழுவினா எண்.3:</u>**

**49)** வாதி கோரியபடி வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் தலா 1/3 பங்கு பாகம் உள்ளதாக இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்பட்டு, வாதிக்கு பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் எதுவும் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**<u>முடிவு:</u>**

முடிவாக, மேற்சொன்ன அனைத்து காரணங்களுக்காகவும், இவ்வழக்கானது வாதி கோரியபடி பாகப்பிரிவினைக்காக பின்வருமாறு அனுமதிக்கப்படுகின்றது:

**1)** தாவா சொத்தை மூன்று சமபாகங்களாக பிரித்து வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு தலா 1/3 பங்கு பாகம் ஒதுக்கி தனித்த சுவாதீனம் கொடுக்க வேண்டும் என முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், இறுதியாக பாகம் பிரிக்க வேண்டி இறுதிநிலை தீர்ப்பாணை மனு தாக்கல் செய்ய 1ம் வாதிக்கு அனுமதியளித்தும் உத்தரவிடப்படுகின்றது. தரப்பினர்களுக்கு இடையே உள்ள உறவு முறைகளைக் கருத்திற்கொண்டு, இவ்வழக்கில் செலவுத்தொகை எதுவும் இல்லை என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ம் நாளாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.06.30 14:47:02 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை.**

**வாதி தரப்பு சாட்சி:**

**வா.சா.1** – பழனிமுத்து **(வாதி)**

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| **வா.சா.ஆ.1** | – | நத்தம் சிட்டாவின் சான்றிட்ட நகல் |
| **வா.சா.ஆ.2** | – | செம்பியநத்தம் கிராமம் புல எண்.207ற்கான நில புல வரைபடத்தின் சான்றிட்ட நகல் |
| **வா.சா.ஆ.3** | – | தாவா சொத்தின் புகைப்படம் (2 எண்ணிக்கை) மற்றும் குறுந்தகடு |

| | | |
|---|---|---|
| **வா.சா.ஆ.4** | 21.03.2019 | பெருமாள் என்பவரது வாரிசு சான்றிதழின் பதிவிறக்க நகல் |
| **வா.சா.ஆ.5** | – | குடும்ப வம்சாவழி பட்டியல் |
| **வா.சா.ஆ.6** | 09.06.2023 | பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் சான்று நகல் |
| **வா.சா.ஆ.7** | 12.08.2025 | பெருமாள் என்பவரது இறப்பு சான்றிதழின் சான்று நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி:</u>**

**பி.வா.சா.1 – முத்துகிருஷ்ணன் (2 ம் பிரதிவாதி)**

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| **பி.சா.ஆ.1** | 19.09.1980 | வீட்டுமனை ஒப்படைவு நமுனாவின் அசல் ஆவணம் |
| **பி.சா.ஆ.2** | 06.04.2022 | மனைவாரி தோராய பட்டாவின் சான்று நகல் |
| **பி.சா.ஆ.3** | 09.06.2023 | வீடு கட்டும் காலி மனை நில கிரைய பத்திரத்தின் அசல் ஆவணம் |
| **பி.சா.ஆ.4** | 18.12.2024 | பட்டா எண்.413 ற்கான பதிவிறக்க நகல் |
| **பி.சா.ஆ.5** | 15.03.2006 | பெருமாள் பெயரில் ஏற்பட்ட வீட்டு வரி இரசீதின் அசல் |
| **பி.சா.ஆ.6** | - | 2 ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்டவீட்டு வரி இரசீதுகளின் அசல் (10 எண்ணிக்கை) |

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.06.30 14:47:16 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை.**